விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 15 செவ்வாய் 29.06.2021 மலர் - 2, இதழ் - 84

# திசை திருப்பும் போராட்டம்

பெட்ரோல் விலை உயர்வு, பாரத் பயோடெக் மருந்து உற்பத்தி உள்ளிட்ட 8 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கம்யூனிஸ்ட்டுகளும் விடுதலை சிறுத்தை கட்சியினரும் மூன்று நாள் போராட்டத்திற்கு அழைப்பை விடுத்துள்ளனர். அது குறித்து பொதுமக்கள் சார்பில் அவர்களுக்கு சில கேள்விகள்...

பெட்ரோல் விலை: கலால் வரியை குறைக்க சொல்லி மத்திய அரசை குறை கூறும் இவர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பெட்ரோல் டீசல் விலையை குறைப்போம், ஜி.எஸ்.டி வரம்பிற்குள் பெட்ரோல் டீசலை கொண்டு வருவோம் என கூறி ஆட்சிக்கு வந்த, தங்கள் கூட்டணியின் தலைமையான தி.மு.கவை கேள்வி கேட்க இவர்களுக்கு துணிவு உள்ளதா?

தடுப்பூசி தயாரிப்பு: செங்கல்பட்டு ஹிந்துஸ்தான் பயோ டெக் தடுப்பு மருந்துகள் உற்பத்தி வளாகத்தை தமிழ்நாடு அரசிடம் வழங்க வேண்டும் என கூறும் இவர்கள், அங்கு மருந்து தயாரிக்க தேவையான மூலப்பொருட்களுக்கு எங்கு போவார்கள், தடுப்பு மருந்து உற்பத்தி தொழில் நுட்பத்திற்கு, தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு யாரிடம் கையேந்துவார்கள், அதற்கான செலவினங்களுக்கு எங்கு போய் நிற்பார்கள், அதனை எப்படி வினியோகிப்பார்கள் என தங்கள் தலைமையை கேட்க முடியுமா?

விலை ஏற்றம்: அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என மத்திய அரசை கோரும் ஆளும் கட்சியின் கூட்டணியில் உள்ள இவர்கள், அந்த கடமையை செய்ய வேண்டிய பொறுப்பு மாநில அரசின் கையில்தான் உள்ளது என்பதை வசதியாக மறந்துவிட்டு மத்திய அரசை விமர்சிக்கின்றனர். இது முறையா, விலை ஏற்றம் மீது தி.மு.க அரசு இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன என்று ஸ்டாலினை கேட்பார்களா இவர்கள்?

நிவாரண உதவி: வாழ்வாதரம் இழந்து நிற்கும் குடும்பங்களுக்கு மாதம் ரூபாய் 7,500/ வீதம் அடுத்த ஆறு மாதங்களுக்கு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கும் கம்யூனிஸ்ட்டுகளும் வி.சி.கவினரும், கொரோனாவால் இறந்தவர்கள் குடும்பத்துக்கு ஒரு கோடி நிவாரண நிதி வழங்க கோரிக்கை வைத்த ஸ்டாலின் தற்போது முதல்வராக பதவி ஏற்ற நிலையில் அதனை செயல்படுத்துவாரா, கொரோனா காலத்தில் டாஸ்மாக் திறக்கக்கூடாது என போராட்டம் நடத்திய ஸ்டாலின் குடும்பம், அவசர அவசரமாக டாஸ்மாக்கை திறந்தது ஏன் என கேள்வி கேட்பார்களா?

கொரோனா மருந்து: கொரோனா தடுப்பு மருந்துகள் உட்பட உயிர் காக்கும் மருந்துகளின் கள்ள வணிகத்தை தடுத்து, நியாய விலையில் மக்களுக்கு மருந்துகள் தட்டுபாடின்றி கிடைப்பதை

மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கும் இவர்கள், அந்த பொறுப்பு யாரிடம் உள்ளது, யார் அதனை செயல்படுத்த வேண்டும், காவல்துறை யார் கட்டுப்பாட்டில் உள்ளது என்ற அரசியல் அமைப்பின் அடிப்படையை அறிவார்களா?

ஆட்சியில் அமர வேண்டி தாங்கள் இஷ்டத்துக்கும் அள்ளித் தெளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல், தனது தோல்வியை மறைக்க போராடும் தி.மு.க அரசு, தங்கள் கூட்டணியினரை வைத்து இது போன்ற வெற்று போராட்டங்களை நடத்த சொல்லியும், ஒன்றியம், அணில், ஜெய் ஹிந்த் என மக்களின் கவனத்தை திசை திருப்பியும் ஐந்தாண்டு கால ஆட்சியை நடத்திவிடலாம் என்று நினைப்பதே இந்த போராட்டங்களின் நோக்கம் என்பது மக்களுக்கு புரியாமல் இல்லை.

விஜயபாரதம் மதிமுகன்



# கல்விக் கட்டணப் புகார்

உயர் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின்படி, கொரோனா சூழலைக் கருத்தில்கொண்டு தனியார் கல்வி நிறுவனங்கள், பெற்றோரிடம் ஆண்டு கல்விக் கட்டணத்தில் 75 சதவீதம் மட்டுமே வசூலிக்க வேண்டும். பேருந்து உட்பட இதர கட்டணங்களை வசூலிக்கக்கூடாது என்று தனியார் பள்ளிகளுக்கு கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது. சில தனியார் பள்ளிகள் முழு கல்விக் கட்டணங்களையும் செலுத்த பெற்றோரை நிர்பந்திப்பதாகக் கூறப்படுகிறது. ஒரு சில பள்ளிகள் அதிக கட்டணம் வசூல் செய்கின்றன. கட்டணம் செலுத்தாத மாணவர்களை இணைய வகுப்பில் பங்கேற்க அனுமதிப்பதில்லை என தொடர்ந்து புகார்கள் வருகின்றன. இதற்காக கல்வித் துறை சார்பில், தனியார் பள்ளிகள் மீதான கல்விக் கட்டணப் புகார்களை தெரிவிக்க 14417 என்ற இலவச உதவி மைய எண் செயல்படுத்தப்படுகிறது. புகார் சம்பந்தமாக மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் மூலம் எச்சரிக்கை விடுக்கப்படும். பள்ளிகள் தொடர்ந்து தவறு செய்தால், துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். புகார் தெரிவிக்கும் பெற்றோரின் தகவல் வெளியே பகிரப்படாது என்றும் கூறப்பட்டுள்ளது.






விஜயபாரதம்

## வைரமுத்து மனு தள்ளுபடி

ஜனவரி 2018ல் ஸ்ரீ வில்லிபுத்தூரில் வைரமுத்து நிகழ்த்திய உரையில் ஆண்டாள் தாயாரின் சிறப்பைக் குறைக்கும் நோக்கில் சில விஷயங்கள் இருந்தன. இந்த உரை தினமணி நாளிதழில் கட்டுரையாகவும் வந்தது. பக்தர்கள் வெகுண்டெழுந்து வீதிக்கு வந்தனர். உலகு தழுவிய போராட்டத்திற்குப் பிறகு தினமணி ஆசிரியர் கே வைத்தியநாதன் ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் சன்னதியில் மன்னிப்புக் கேட்டார். ஆண்டாள் பற்றிய பேச்சு, கட்டுரை குறித்து காவல்துறை விசாரணை கூடாது என்று வைரமுத்து தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. ஆனால், காவ்லதுறை வைரமுத்துவை விசாரிக்க வேண்டும் என்று வழக்கறிஞர் சதீஷ் குமார் ஸ்ரீனிவாசன் பக்தர்கள் சார்பில் வாதிட்டார். இவ்வழக்கில், உயர்நீதிமன்றத்தில் வைரமுத்துவின் மனு இன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

## மாட்டும் மல்லையா



விஜயபாரதம்

காங்கிரஸ் ஆட்சி காலத்தில், இந்திய வங்கிகளில், தொழிலதிபர்களான விஜய் மல்லையா ரூ. 9,500 கோடியும், வைர வியாபாரிகளான நீரவ் மோடியும், மெகுல் சோக்சி ரூ. 13,500 கோடியும் கடன் வாங்கி மோசடி செய்தனர். பா.ஜ.க ஆட்சியில் பிடிபடுவோம் என தெரிந்ததும் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றனர். அவர்களை நாடு கடத்தி வரும் நடவடிக்கைகளை சி.பி.ஐயும், அமலாக்கத்துறையும் எடுத்துள்ளன. ஏற்கனவே முகுல் சோக்சி, நிரவ் மோடியை கொண்டு வரும் முயற்சிகள் வெற்றி பெறும் நிலையை அடைந்துவிட்டன. தற்போது, நாடு கடத்துவதை எதிர்த்து மல்லையா தொடர்ந்த வழக்குகள் அனைத்தும் தோல்வியில் முடிந்துள்ளன. இதனால், சட்டத்தின் மூலம் காலம் தாழ்த்துவதற்கான அனைத்து கதவுகளும் மல்லையாவுக்கு மூடப்பட்டு விட்டது. இனி, அவரை இந்தியாவுக்கு நாடு கடத்தி வந்து சிறையில் அடைக்க வேண்டியதுதான் பாக்கி. அதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக சிபிஐ.யும். அமலாக்கத் துறையும் தெரிவித்துள்ளன.

## ஹிந்து அறநிலையத்துறை உத்தரவு




விஜயபாரதம்

ஹிந்து அறநிலையத் துறையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள கோயில்களில், அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் தொகுப்புப் பட்டியலில் இடம்பெறாத பணியிடங்களில் ஆணையரது அனுமதியின்றி அறங்காவலர் குழு, தக்கார், நிர்வாகிகளின் தீர்மானங்களின் அடிப்படையில் பணியாளர்கள் எவரும் தற்காலிகமாக, தினக்கூலி, தொகுப்பூதிய அடிப்படையில், ஊதிய விகித முறையில் நியமிக்கப்பட்டிருப்பின் அவர்களை உடனடியாக பணியில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று ஹிந்து சமய அறநிலையத் துறை ஆணையர் குமரகுருபரன் உத்தரவிட்டுள்ளார். மேலும், தற்போதைய தேவைகளை கருதி அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ள பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தால் அதற்கான ஆணையரின் அனுமதி விவரங்களை குறிப்பிட்டு புதிய பணியாளர் தொகுதிப் பட்டியலை அங்கீகாரம் பெற அனுப்ப வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# தடுப்பூசிக்கு எதிராக பிரசாந்த் பூஷண்

தொழில் நிறுவனங்களில் கொரோனா தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு, பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர். செல்வவிநாயகம் மாவட்ட துணை சுகாதாரத் துறை இயக்குனர்கள், சென்னை மாநகராட்சி சுகாதார அதிகாரி ஆகியோருக்கு சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார். அதில், தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதையும், மருத்துவக் காப்பீடு கட்டாயமாக இருப்பதையும் உறுதி செய்தல் அவசியம். தொழில் நிறுவன வளாகங்கள் கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்தப்பட்டு வருவதை கண்காணிக்க வேண்டும். பணியாளர்களின் உடல் வெப்ப நிலையை பரிசோதித்த பிறகே அவர்களை நிறுவனங்களுக்குள் அனுமதிக்க வேண்டும். நோய்த்தொற்று அறிகுறிகள் இருக்கும் ஊழியரை தனிமைப்படுத்தி, பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

# நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்



விஜயபாரதம்

தொழில் நிறுவனங்களில் கொரோனா தொற்று பரவுவதை தடுக்கும் பொருட்டு, பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர். செல்வவிநாயகம் மாவட்ட துணை சுகாதாரத் துறை இயக்குனர்கள், சென்னை மாநகராட்சி சுகாதார அதிகாரி ஆகியோருக்கு சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார். அதில், தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதையும், மருத்துவக் காப்பீடு கட்டாயமாக இருப்பதையும் உறுதி செய்தல் அவசியம். தொழில் நிறுவன வளாகங்கள் கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்தப்பட்டு வருவதை கண்காணிக்க வேண்டும். பணியாளர்களின் உடல் வெப்ப நிலையை பரிசோதித்த பிறகே அவர்களை நிறுவனங்களுக்குள் அனுமதிக்க வேண்டும். நோய்த்தொற்று அறிகுறிகள் இருக்கும் ஊழியரை தனிமைப்படுத்தி, பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குவியும் புகார்கள்




விஜயபாரதம்

மின்னகம் சேவை மையத்தில் கடந்த ஒரே வாரத்தில் 50 ஆயிரம் புகார்கள் குவிந்துள்ளன. தமிழகத்தில் மின்துறை சார்ந்த தகவல்கள், புகார்கள் தெரிவிக்க 'மின்னகம்' என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. சேவை மையத்திற்கென பிரத்யேகமான 9498794987 என்ற கைபேசி எண்ணையும் அறிமுகம் செய்துள்ளனர். தற்போதைய ஆட்சியில் ஏற்படும் மின்வெட்டு, மின்கட்டண உயர்வு குறித்து ஒரு வாரத்துக்குள் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புகார்கள் மின்நுகர்வோரிடம் இருந்து வந்து குவிந்துள்ளன. மின்வெட்டுக்கு அணில்களே காரணம் என கூறும் மின்துறை அமைச்சர் புகார்கள் மீது எவ்வித நடவடிக்கை எடுப்பார் என்றும், தமிழகத்தை மீண்டும் மின்மிகை மாநிலமாக்க என்ன முயற்சிகள் எடுப்பார் என்றும் பொறுத்திருந்து பார்ப்போம் என நெட்டிசன்கள் வலைத் தளங்களில் விவாதிக்கின்றனர்.

# இரக்கம் இல்லா கம்யூனிஸ்டுகள்



விஜயபாரதம்

**கே**ரளாவின் செர்த்தலாவில் உள்ள 'மாருத்தோர்வட்டம் பகுதியில், கொரோனா நோயாளிகளுக்கு இலவச உணவு வழங்கும் தொண்டில் சேவாபாரதி ஈடுபட்டது. அதில் பென்னி என்பவரின் 11 வயது மகளான கிறிஸ்டி ஆர்வமுடன் கலந்துகொண்டார். அதனால் அந்த கிறிஸ்தவ குடும்பமும் சேவாபாரதியுடன் இணைந்து ஆர்வமுடன் செயல்பட்டனர். முன்னதாக, பென்னி, கம்யூனிச கட்சியில் முன்பு இருந்தவர். பின்னர் ஏற்பட்ட சில மனக்கசப்பு சம்பவங்களால் விலகினார். இதனால் ஆத்திரமுற்ற அக்கட்சியின் குண்டர்கள், அந்த குடும்பத்தினரை எச்சரிக்கும் விதமாக, அக்குழந்தை செல்லமாக வளர்த்துவந்த 25 புறாக்களை கொடூரமாகக் கொன்றுவிட்டனர். அவர்களால் தங்கள் உயிருக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் என அஞ்சிய அக்குடும்பத்தினர், காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். இதனை கேள்விப்பட்ட ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.க தலைவர்கள் அவர்களின் வீட்டிற்குச் சென்று ஆறுதல் கூறினர்.

# கூகுள் முகநூலுக்கு சம்மன்




விஜயபாரதம்

**கூ**குள், முகநூல் போன்ற இணையம், சமூக வலைத்தளங்கள் தவறாக பயன்படுத்தப்படுவது தொடர்பாக விளக்கமளிக்க வேண்டும் என்று, நாடாளுமன்ற நிலைக்குழு அந்த நிறுவனங்களுக்கு சம்மன் அனுப்பியுள்ளது. நாடாளுமன்ற நிலைக்குழு முன் கூகுள், முகநூல் நிறுவன அதிகாரிகள் இன்று ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

# பயங்கரவாத தேர்வு மையமாகும் கேரளா

**கே**ரள சட்டம் ஒழுங்கு டி.ஜி.பியாக இருப்பவர் லோக்நாத் பெஹ்ரா. இவர் வரும் 30ம்தேதி ஓய்வு பெறுகிறார். இந்நிலையில் அவர் அளித்த பேட்டி ஒன்றில் 'இந்தியாவில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கும் மாநிலங்களில் கேரளா ஒன்று. ஆனாலும் சில பகுதிகளில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் உள்ளன. கடந்த சில வருடங்களாக கேரள வனப்பகுதியில் மாவோயிஸ்ட் பயங்கரவாதிகள் அச்சுறுத்தல் உள்ளது. மாவோயிஸ்ட்டுகள் திருந்துவதற்கு பல வாய்ப்புகள் கொடுக்கப்பட்டது. ஆனால் அதை அவர்கள் ஏற்கவில்லை. காவல்துறையுடன் நடந்த துப்பாக்கி சண்டையில் சில மாவோயிஸ்டுகள் கொல்லப்பட்டனர். ஐ.எஸ்.ஐ.எஸ் உட்பட பல சர்வதேச பயங்கரவாத இயக்கங்களுக்கு கேரளா ஒரு தேர்வு மையமாக உள்ளது. கேரளாவில் டாக்டர்கள், இன்ஜினியர்கள் உட்பட படித்தவர்களை மூளை சலவை செய்து தங்கள் இயக்கத்திற்கு ஆட்களை சேர்க்கின்றனர். கேரளாவில் ஸ்லீப்பர் செல்கள் இல்லை என்றும் கூற முடியாது. கேரள காவல்துறையினர் பல பயங்கரவாத செயல்பாடுகளை முறியடித்துள்ளனர்' என தெரிவித்தார்.



விஜயபாரதம்

# கடத்தல் ஆசாமி கட்சியில் சேர்ப்பு

குஜராத் மாநில சட்டசபை தேர்தல் 2022 டிசம்பரில் நடைபெறவிருக்கிறது. அதில் ஆம் ஆத்மி கட்சியும் போட்டியிட முடிவு செய்துள்ளது. இச்சூழலில், சூரத்தைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் வியாபாரியான மகேஷ் சவானி, ஆம் ஆத்மி கட்சியில் இணைந்துள்ளார்.



விஜயபாரதம்

இவர் சமூகசேவை என்ற பெயரில் பல மோசடிகளை செய்வதாக ஏற்கனவே பல குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர். மேலும், கடந்த 2020 ஆம் ஆண்டில், கௌதம் படேல் என்பவரை கடத்தி 19 கோடி ரூபாய் கேட்டு மிரட்டியவர். கௌதமை மகேஷ் சவானி கடத்திய வீடியோ ஆதாரங்களை வைத்து அவர் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் காவல் அதிகாரி சுட்டுக்கொலை

ஜம்மு காஷ்மீரில் உள்ள புல்வாமா மாவட்டத்தில் முன்னாள் காவல்துறை அதிகாரியான பயஸ் அகமது, அவரது மனைவி ராஜா பேகம் ஆகியோரை, பயங்கரவாதிகள் வீடு புகுந்து சுட்டுக் கொன்றனர். படுகாயமடைந்த காவல் அதிகாரியின் மகள் ரஃபியா, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தப்பிச்சென்ற பயங்கரவாதிகளை ராணுவ வீரர்கள் தேடி வருகின்றனர். ஜம்மு விமானப்படை தளத்தில், வெடிகுண்டு தாக்குதல் நடத்திய நிலையில் முன்னாள் அதிகாரி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. விமானப்படை தள வெடிகுண்டு தாக்குதலுக்கும் இச்சம்பவத்திற்கும் ஏதும் சம்மந்தம் இருக்குமா என்ற கோணத்திலும் விசாரணை நடைபெற்று வருகிறது.



விஜயபாரதம்

# தாதாக்கள் களையெடுப்பு



விஜயபாரதம்

உத்தரப் பிரதேசத்தில் தாதா கும்பல்களிடம் இருந்து இதுவரை ரூ.1,128 கோடி மதிப்புள்ள சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அகிலேஷ், மாயாவதி உள்ளிட்டோரது முந்தைய அரசுகளின் ஆதரவால் இவர்கள் நிழல் ராஜ்ஜியம் நடத்தி வந்தனர். கடந்தாண்டு தன்னை பிடிக்க வந்த 8 காவலர்களை தாதா விகாஷ் துபே சுட்டுக் கொன்றான் இதையடுத்து முதல்வர் யோகி ஆதித்திய நாத் உத்தரவின் பேரில், தாதா கும்பல்கள் மீதான அதிரடி நடவடிக்கையை உ.பி காவல்துறையினர் துவக்கினர். துபே சுட்டுக் கொல்லப்பட்டான். அவனது பல நூறு கோடி சொத்துகளும் பறிமுதல் செய்யப்பட்டது. இதேபோல முக்தர் அன்சாரி, அட்டீப் அகமது, சுந்தர்பாட்டி உள்ளிட்ட மற்ற தாதா கும்பல் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். சிலர் தானாக சரணடைந்தனர். அவர்களின் அசையும், அசையா சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதன் மொத்த மதிப்பு ரூ. 1,128 கோடி. கடந்த 2020ம் ஆண்டு ஜனவரி முதல் கடந்த ஏப்ரல் வரை, சட்ட விரோத கும்பல்கள் மீது 5,558 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில், 22,259 குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# ஈரான் பயங்கரவாத மையங்கள் மீது தாக்குதல்

ஈராக்கில் உள்ள அமெரிக்க படைகள் மீது, ஆளில்லா விமானங்கள் மூலம் ஈரான் பயங்கரவாத அமைப்புகள் தொடர் தாக்குதலை நடத்தி வருகின்றன. இதனையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சிரியா, ஈராக் நாடுகளின் எல்லைப் பகுதிகளில் அமெரிக்கா வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது. பயங்கரவாத மையங்களாகவும், ஆயுதங்களை பதுக்கி வைத்துள்ள இடங்களாகவும் கண்டறியப்பட்ட சிரியாவில் 2 இடங்களிலும் ஈராக்கில் ஒரு இடத்திலும் அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் உத்தரவுப்படி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என அமெரிக்காவின் ராணுவ மையம் பென்டகன் தெரிவித்துள்ளது.



விஜயபாரதம்

# இம்ரான்கான் பேச்சுக்கு மறுப்பு



விஜயபாரதம்

கடந்த ஆண்டு பயங்கரவாதிகளின் புகலிடம் பாகிஸ்தான் என்ற அமெரிக்காவின் அறிக்கை வெளியானது. அன்றைய தினம், பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அந்நாட்டு பிரதமர் இம்ரான் கான், 'பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் அமெரிக்காவிற்கு உதவிய என் நாடு அவமானத்தை சந்திக்கிறது. அபோட்டாபாத்தில், அல்கொய்தா தலைவர் தியாகி ஒசாமா பின்லேடனை அமெரிக்கர்கள் கொன்றனர். இது பெரிய அவமானம் என்று பேசினார். இந்த வீடியோ சமூக ஊடகங்களில் பரவியதை அடுத்து இம்ரான் கான், உலக அளவில் கடும் கண்டனத்திற்கு ஆளானார். பாகிஸ்தான் எதிர்க்கட்சியினரேகூட இம்ரான் கானை கடுமையாக விமர்சித்தனர். இந்நிலையில், தற்போது இது குறித்து பேசிய பாகிஸ்தானின் தகவல் துறை அமைச்சர் ஃபவாத் சவுத்ரி, 'இம்ரான் கான் வாய் தவறி அவ்வாறு பேசிவிட்டார். ஒசாமா பின்லேடனை பயங்கரவாதியாகவே பாகிஸ்தான் கருதுகிறது. அல்கொய்தா இயக்கத்தையும் பயங்கரவாத இயக்கமாகவே நாங்கள் கருதுகிறோம்' என்று தெரிவித்துள்ளார்.

# உய்குர் முஸ்லிம்களை வேட்டையாடும் சீனா

சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் உள்ள உய்குர் முஸ்லிம்களை சொல்லொனா துயரத்திற்கு சீன கம்யூனிச அரசு ஆளாக்குகிறது என பல நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் குற்றம் சாட்டியுள்ளன. இந்நிலையில், உய்குர் மனித உரிமைகள் திட்டம் (யு.எச்.ஆர்.பி) மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான ஆக்சஸ் சொசைட்டி ஆகியவை நடத்திய ஒரு ஆய்வில், பாகிஸ்தான், கிர்கிஸ்தான், கம்போடியா, துருக்கி, மியான்மர் உள்ளிட்ட 28 நாடுகளுக்கு தப்பிசென்ற உய்குர் முஸ்லிம்களை திருப்பி அனுப்ப சீனா நிர்பந்தித்துள்ளது. அந்த நாடுகளும் சீனாவின் அழுத்தத்திற்கு பணிந்துள்ளன. திரும்பி வந்தவர்களை சித்ரவதை முகாம்களில் அடைத்து கொடுமை செய்கிறது. அந்த நாடுகளில் தங்கியுள்ளோரை பல்வேறு வழிகளில் மௌனமாக்குகிறது என்ற அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.




விஜயபாரதம்

# வாழ்வின் அரண் அன்பு

ஒரு ஊரில் குமரன் தன் தாய் தந்தையுடன் வசித்துவந்தான். அப்போது அவன் வீட்டின் முன் மூன்று வயதானவர்கள் வந்து உள்ளே வரலாமா? என்று கேட்டனர்.

தந்தை வாருங்கள் அனைவரும் என்றார்.

வந்தவர்களில் ஒருவர், நான் பணம், இவர் வெற்றி, இவரோ அன்பு. நாங்கள் மூவரும் ஒன்றாக வரமுடியாது. யாராவது ஒருவர்தான் வரமுடியும். எங்கள் மூவரில் உங்களுக்கு யார் வேண்டுமோ அவரை அழைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

குமரனின் தந்தை, நாம் வெற்றியை அழைக்கலாம், எந்த வேலையைச் செய்தாலும் அதில் வெற்றியே நமக்கே கிடைக்கும் என்றார்.

ஆனால் குமரனோ, அப்பா நாம் பணத்தையே உள்ளே அழைக்கலாமே, நம்மிடம் பணம் சேர்ந்துவிட்டால், வெற்றி உட்பட அனைத்தையும் பெற்றுவிடலாம் என்றான்.

ஆனால் குமரனின் தாயோ வேண்டாம், அன்பையே அழைத்து மகிழ்வோம். அன்புதான் அனைத்திலும் உயர்ந்தது என்றார்.

தந்தை, மகன் இருவரும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டனர். பின் மூவரும், அன்பே உள்ளே வந்து வாழும் காலமெல்லாம் நிலைத்து இருக்கட்டும் என்றனர்.

அன்பு உள்ளே வர, அவரைத் தொடர்ந்து வெற்றியும், பணமும் கூட உள்ளே வந்தனர். உடனே குமரனின் அம்மா, அன்பை மட்டும் தானே உள்ளே அழைத்தோம் என்றாள். ஒருவர் மட்டும்தான் வருவோம் என கூறி, மூவரும் வருகிறீர்களே! என்றார்.

அன்பு சொன்னார், நீங்கள் பணத்தையோ, வெற்றியையோ அழைத்திருந்தால், மற்ற இருவரும் வெளியே நின்றிருப்போம். ஆனால் அன்பான என்னை அன்பாக உள்ளே அழைத்தீர்கள். நான் இருக்கும் இடத்தில் பணமும், வெற்றியும் இருக்கும். ஆகவே அவர்களும் உள்ளே வந்து விட்டனர் என்றார்.

அன்பு உள்ளம் இருந்தால், நம் வாழ்வில் வெற்றியும், தேவையான எல்லா செல்வங்களும் தானாகவே வந்துவிடும்.

அன்பே சிவம்!! அதுவே வாழ்வின் அறம்.

இதையே வள்ளுவர்,

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும். இல்லையேல், அது எலும்புத்தோல் போர்த்திய வெறும் உடலாகும் என்றார்.

விஜயபாரதம்

ப. கமலயாழினி

